# விஜயபாரதம்

மின்னனு தின இதழ் (தனிச்சுற்று) VIJAYABHARATHAM DAILY

பிலவ, ஆனி - 23 புதன் 07.07.2021 மலர் - 2, இதழ் - 92


## கோவின் செயலி 75 நாடுகள் ஆர்வம்



விஜயபாரதம்

பிரதமர் நரேந்திர மோடி, கோவின் குளோபல் கான்க்ளேவில் உரையாற்றினார், அப்போது, ‘உலகம், கொரோனாவை எதிர்த்துப் போராடுவதற்காக, கோவின் இயங்கு தளம் பொது நன்மையை கருதி விரைவில் திறந்த மூல மென்பொருளாக மாற்றப்படும். அதனை பயன்படுத்த விரும்பும் அனைத்து நாடுகளுக்கும் அது கிடைக்கும். இது பாரத அரசிற்கு மகிழ்ச்சியளிக்கிறது’ என தெரிவித்தார். இந்த உலகளாவிய கோவின் கான்க்ளேவ் நிகழ்ச்சியில், வெளிநாடுகளை சேர்ந்த 196 அதிகாரிகளும், 41 நாடுகளைச் சேர்ந்த 116 தனியார்களும் பங்கேற்றனர்.

கோவின் ஜனவரி 16 ஆம் தேதி தொடங்கப்பட்டதில் இருந்து ஜூலை 1 வரையில் 35.4 கோடிக்கும் அதிகமான மக்கள் இதனை பயன்படுத்தியுள்ளனர். கனடா, மெக்ஸிகோ, நைஜீரியா உள்ளிட்ட76 நாடுகள், நமது கோவின் செயலியைப் பயன்படுத்த ஆர்வம் காட்டியுள்ளன. மேலும், கோவின் உடன் ஒருங்கிணைக்க பேடிஎம், ரிலையன்ஸ், இபிபோ உள்ளிட்ட தனியார் மற்றும் பொது நிறுவனங்களிலிருந்து 204 க்கும் மேற்பட்ட விண்ணப்பங்கள் வந்துள்ளன. அவற்றில் 148 ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன. அவை ஒருங்கிணைப்புகளை நிறைவு செய்யும் பணியில் உள்ளன.

கோவின் செயலியில், பதியப்பட்ட தகவல்களில் உள்ள தவறுகளை திருத்த தேவையான வசதிகள் ஏற்கனவே ஏற்படுத்தப்பட்டுள்ளன. அடுத்ததாக, சர்வதேச பயணங்களுக்கான தடுப்பூசி சான்றிதழ்களுடன், பாஸ்போர்ட்டை இணைக்கும் அம்சமும் இதில் இணைக்கப்படுகிறது. உலக நாடுகள் இதனை இலவசமாக பயன்படுத்தலாம் ஆனால் ஒரே ஒரு நிபந்தனை; யாரும் இந்த மென்பொருளை வணிக பயன்பாட்டிற்கு பயன்படுத்த அனுமதிக்கக் கூடாது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## புதுச்சேரியில் புது சட்டமன்றம்

புதுச்சேரியில் தட்டாஞ்சாவடி பகுதியில் அமையவுள்ள புதிய சட்டமன்ற வளாகத்திற்கு ஆகஸ்ட் மாதத்தில் உள்துறை அமைச்சர் அமித் ஷா, மக்களவை சபாநாயகர் ஓம் பிர்லா ஆகியோர் அடிக்கல் நாட்டுகிறார்கள். இது 15 ஏக்கர் பரப்பளவில் கட்டப்படவுள்ளது. இந்த கட்டிடத்தை 15 மாதத்திற்குள் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது. சட்டமன்றத்துடன் இணைந்து, அமைச்சர்கள் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் அலுவலகம் மற்றும் தலைமைச் செயலகம், பிற அரசு அலுவலகங்களை அமைப்பதற்காக 2 மாடி கட்டிடம் அமைக்கப்படவுள்ளது. இதற்கு மத்திய அரசு நிதியுதவி அளிக்கும். புதுச்சேரி அரசிடம் ஒப்புதலைப் பெற்ற பின்பு முறையான முன்மொழிவு கடிதம், நகர்ப்புற மேம்பாட்டு அமைச்சகத்திற்கு அனுப்பப்பட்டு ஒப்புதல் மற்றும் நிதியைப் பெறுவதற்காக அனுப்பப்படும்.



விஜயபாரதம்

# அனுமதியற்ற கிறிஸ்தவ ஆலயம்



விஜயபாரதம்

மூங்கில்துறைப்பட்டு அருகே மோடங்கல் மலை உள்ளது. வனத்துறைக்கு சொந்தமான இந்த மலையில் கடந்த சில மாதங்களுக்கு முன்பு அப்பகுதியை சேர்ந்த ஒருவர் முன் அனுமதி இல்லாமல் கிறிஸ்தவ ஆலயத்தை கட்டினார். அதற்கு அப்பகுதி மக்கள் எதிர்ப்பு தெரிவித்தனர். கட்டுமானப் பணிகளை உடனடியாக தடுத்து நிறுத்த கோரிக்கை விடுத்து வந்தனர். இது குறித்த தகவல் அறிந்து சங்கராபுரம் தாசில்தார், வருவாய் துறையினர், காவல்துறையினர் அங்கு சென்று விசாரணை நடத்தினர். பின்னர் சட்டம் ஒழுங்கு பிரச்சினையை கருத்தில் கொண்டு கட்டுமான பணிகளை அதிகாரிகள் தடுத்து நிறுத்தினர்.

# இஸ்ரோ இலவச படிப்பு



விஜயபாரதம்

இஸ்ரோவின், 'தொலை உணர்வின் முக்கியத்துவம் மற்றும் சுற்றுச் சூழல் கல்வியில் பயன்பாடு' என்ற தலைப்பில் இலவச ஆன்லைன் பயிற்சி வகுப்பு வரும், 26 முதல், 30ம் தேதி வரை நடக்கிறது. இதில், 10, 11 மற்றும், 12ம் வகுப்பு மாணவர்கள் கலந்து கொள்ளலாம். 'யூ டியூப்' வாயிலாக நேரடி ஒளிபரப்பும் உண்டு. தினமும், காலை, 10:00 முதல், 10:45; மதியம், 12:00 முதல் 12:45 மணி வரை வகுப்பு நடைபெறும். மாணவர்கள், தங்களது தகவல் மற்றும் புகைப்படத்தை இஸ்ரோ இணையதளத்தில் பதிவேற்றம் செய்து வழிமுறைகளை பின்பற்றி ஆன்லைன் வழி படிப்பில் இணையலாம். இதற்கான சான்றிதழ் ஆகஸ்ட் 5ல் இஸ்ரோவால் வழங்கப்படும். இப்பயிற்சி, தொலை உணர்வு சார்ந்த ஆராய்ச்சி படிப்புகளில் ஆர்வம் உள்ள மாணவர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

# ஒலிம்பிக்கில் பாரதக் கொடி




விஜயபாரதம்

ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் ஒலிம்பிக் போட்டிகள் வரும் 23ம் தேதி தொடங்குகிறது. இதையொட்டி அன்று நடைபெறும் தொடக்க விழா அணிவகுப்பில், குத்துச்சண்டை வீராங்கனை மேரி கோம் மற்றும் ஆடவர் ஹாக்கி அணி கேப்டன் மன்பிரீத் சிங் ஆகியோர் தேசியக் கொடியை ஏந்தியபடி பாரத வீரர்கள் குழுவினரை வழிநடத்திச் செல்வார்கள். ஆகஸ்ட் 8ம் தேதி நடைபெறும் நிறைவு விழாவில் மல்யுத்த வீரர் பஜ்ரங் புனியா தேசியக் கொடியை ஏந்திச் செல்வார் என இந்திய ஒலிம்பிக் சங்கம் தெரிவித்துள்ளது. இதில், சுமார் 126 வீரர், வீராங்கனைகளும் 75 அதிகாரிகளும் என பாரதத்தில் இருந்து சுமார் 201 பேர் பங்கேற்க கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.


# அரசு ரூ. 500 கோடி பாக்கி

மத்திய அரசின், கட்டாய கல்வி உரிமை சட்டத்தின்படி, சிறுபான்மை இல்லாத தனியார் பள்ளிகளில் 25 சதவீத இடம் அளித்து இலவச கல்வி வழங்க வேண்டும். அதற்கான கல்வி கட்டணத்தை, மத்திய அரசே மாநில அரசுக்கு வழங்கும். தமிழகத்தில் இச்சட்டத்தின்படி, மூன்றரை வயது முடிந்த குழந்தைகள் எல்.கே.ஜி.,யில் சேர்க்கப்படுகின்றனர். ஆனால், மத்திய அரசின் விதிப்படி, ஐந்து வயதான குழந்தைகள்தான் ஒன்றாம் வகுப்பில் சேர்க்கப்பட வேண்டும். எனவே, தமிழக அரசின் விதிகளுக்கு முரணான நடைமுறையால் இலவச சேர்க்கைக்கான கல்வி கட்டணத்தை மத்திய அரசிடம் இருந்து பெறமுடியாது. எனவே, மாநில அரசே, பள்ளிக் கட்டணம் செலுத்தி வருகிறது. இந்நிலையில், இரண்டு ஆண்டுகளாக இந்த இலவச மாணவர் சேர்க்கைக்கு, தமிழக அரசு வழங்க வேண்டிய கல்வி கட்டண தொகை ரூ. 500 கோடியை இன்னமும் தரவில்லை. இதற்கு நிதிப்பற்றாக்குறை காரணம் கூறப்படுகிறது. நடப்பு கல்வி ஆண்டுக்கான இலவச மாணவர் சேர்க்கை பணிகள் துவங்கிஉள்ள நிலையில் முந்தைய கல்வி கட்டண பாக்கியை, அரசு உடனடியாக வழங்குமாறு பள்ளிகள் கோரிக்கை வைத்துள்ளன.

விஜயபாரதம்




# மாணவரை திட்டிய எம்.எல்.ஏ



விஜயபாரதம்

கேரளாவில் கொல்லம் தொகுதி மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி எம்.எல்.ஏ நடிகர் முகேஷ். இவர் தமிழில், ஐந்தாம்படை, ஜாதிமல்லி உள்ளிட்ட படங்களில் நடித்துள்ளார். அவருக்கு வந்த ஒரு அலைபேசி அழைப்பில், ஒரு மாணவர் அவரிடம் உதவி கேட்டார். அதற்கு, இந்த எண்ணை உனக்கு தந்தது யார் என முகேஷ் கேட்க, என் 'நண்பர் தந்தார்' என மாணவர் பதிலளித்தார் மாணவர். ஆத்திரமடைந்த முகேஷ், 'உன் நண்பனை அடிக்க வேண்டும் என்றார். அடுத்து, 'உன் தொகுதி எம்.எல்.ஏ யார்' என முகேஷ் கேட்டதற்கு அந்த மாணவர் 'தெரியாது' என்றார். இதனால் கோபமடைந்த முகேஷ், 'எம்.எல்.ஏ யார் என்றே தெரியாத உன்னை துடைப்பத்தால் அடிக்க வேண்டும்' என திட்டியுள்ளார். இந்த ஆடியோ சமூக வலைதளங்களில் வேகமாக பரவியது. இது காங்கிரஸ் சதி, இது குறித்து போலீசில் புகார் அளிக்க உள்ளேன். உதவி கேட்கும் மாணவர் எதற்காக பேச்சை பதிவு செய்ய வேண்டும் என்றும் கேள்வி எழுப்பினார் முகேஷ். பின்னர், மார்க்சிஸ்ட் நிர்வாகிகள் மாணவரை சி.ஐ.டி. யூ அலுவலகத்துக்கு அழைத்து வந்து பேசினர். உள்ளே என்ன பேசப்பட்டது, சமாதானப்படுத்தப்பட்டாரா, மிரட்டினார்களா என யாருக்கும் தெரியாத நிலையில், அந்த மாணவர், திடீரென முகேஷின் பேச்சை நியாயப்படுத்தும் வகையில் பேட்டியளித்தார்.

# பஜ்ரங் தள் போராட்டம்

தெலுங்கானாவை ஆளும் சந்திரசேகர ராவ் தலைமையிலான அரசு, அசாசுதீன் ஒவைசியின் ஏ.ஐ.எம்.ஐ.எம் கட்சியுடன் கூட்டணி வைத்துள்ளதால், அங்கு பசுவதை மற்றும் விலங்கு பாதுகாப்பு சட்டத்தை அம்மாநில அரசு செயல்படுத்தவில்லை. ஏ.ஐ.எம்.ஐ.எம் ஆதரவுடன், கால்நடை மாஃபியாக்கள் தெலுங்கானாவில் சட்டத்திற்கு பயப்படாமல் செயல்படுகின்றனர் என்ற விமர்சனங்கள் எழுந்துள்ளன. இதனையடுத்து, தெலுங்கானாவில் பசுவதை மற்றும் விலங்கு பாதுகாப்பு சட்டத்தை அமல்படுத்தவும், கால்நடை மற்றும் மாட்டிறைச்சி கடத்தல்காரர்கள் மீது நடவடிக்கை எடுக்கக் கோரியும் பஜ்ரங் தள் அமைப்பினர் கடந்த திங்கட்கிழமை தெலுங்கானாவில் மாநிலம் தழுவிய போராட்டத்தை நடத்தினர். மேலும், பசு கடத்தலுக்கு எதிர்ப்புத் தெரிவித்ததற்காக பஜ்ரங் தள் உறுப்பினர் மீது கொலை முயற்சி மேற்கொள்ளப்பட்டது. இவ்வழக்கில் காவல்துறை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. எனவே குற்றவாளிகளை உடனடியாக கைது செய்ய வேண்டும் என்ற கோரிக்கையும் வைக்கப்பட்டது. விஜயபாரதம்







# 2,000 கோடிக்கும் அதிகமான இழப்பு



விவசாய சட்ட எதிர்ப்புப் போராட்டம் என்ற பெயரில், விவசாய ஏஜெண்டுகளால்டெல்லி, ஹரியானா எல்லைகளில் பல மாதங்களாக நடத்தப்படும் போராட்டங்களால், ஹரியானா மற்றும் பஞ்சாபில் உள்ள சுமார் 50 டோல் பிளாசாக்கள் கடந்த 8 மாதங்களாக மூடப்பட்டுள்ளன. இதனால் சுமார், 2,000 கோடி ரூபாய்க்கும் அதிகமான இழப்பு ஏற்பட்டுள்ளது. மத்திய அரசின் பலகட்ட பேச்சுவார்த்தைகள் இதில் பலன் அளிக்கவில்லை. ஆக்கபூர்வமான பேச்சுவார்த்தை, தேவையான சட்ட சீர்திருத்தம் என அனைத்தையும் செய்யத் தயார் என மத்திய அரசு தெரிவித்தும் அவர்கள் வீண் பிடிவாதம் பிடித்து வருகின்றனர். மேலும் நாடாளுமன்ற மழைக்காலக் கூட்டத் தொடர் தொடங்கும் ஜூலை 19ம் தேதி, பிரச்சனையை ஏற்படுத்தும் நோக்கில், நாடாளுமன்றம் நோக்கி அவர்கள் ஒரு பேரணியும் ஏற்பாடு செய்துள்ளனர்.

விஜயபாரதம்

# வீடுகளில் ஆர்.சி.டி. பொருத்த உத்தரவு

மின் சாதனங்களை இயக்கும் போது, ஷாக் அடித்தால், ரெசிடுயல் கரன்ட் டிவைஸ் (ஆர்.சி.டி) என்ற சாதனம் தானாகவே மின் வினியோகத்தை துண்டிக்கும். பின், பழுதான சாதனத்தை மின் இணைப்பில் இருந்து விலக்கி ஆர்.சி.டியின் ஸ்விட்சை இயக்கி மீண்டும் மின்சாரத்தை பயன்படுத்தலாம். இது தற்போது சில வீடுகளில் பயன்படுத்த ஆரம்பிக்கப்பட்டுள்ளது. புதிதாக மின் இணைப்பு கோரும் விண்ணப்பதாரர்கள் அனைவரும் இந்த ஆர்.சி.டி அமைப்பை நிறுவ வேண்டும். இந்த உயிர் காக்கும் சாதனத்தை கட்டடத்தில் பொருத்தாதவர்களுக்கு மின் இணைப்பு வழங்கப்பட மாட்டாது என, தமிழக மின்சார ஒழுங்குமுறை ஆணையம் அறிவித்துள்ளது. ஆர்.சி.டியின் மின் கசிவை உணரும் திறன் 30 மில்லி ஆம்பியருக்கு மிகாமல் இருக்க வேண்டும். 10 கிலோ வாட்டிற்கு மேற்பட்ட மின் சாதனங்களை பொருத்தி இருக்கும் அங்காடிகள், வணிக நிறுவனங்கள், மருத்துவமனைகள், தொழிற்சாலைகளில் மின் இணைப்பு துவங்கும் இடத்தில் 300 மில்லி ஆம்பியர் அளவிற்கான மின் கசிவை உணரும் திறன்கொண்டதாக இருக்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.




விஜயபாரதம்

# என்ன நடக்கிறது ஆப்கனில்?

அமெரிக்கா, நேட்டோ படைகள் ஆப்கானிஸ்தானில் இருந்து வெளியேறி வருகின்றன. செப்டம்பருக்கு முன்னதாகவே அனைத்து வெளிநாட்டு படைகளும் ஆப்கனில் இருந்து வெளியேறிவிடும் என தெரிகிறது. இந்நிலையில், ஆப்கனில் பாதுகாப்பு படைகளுக்கும் தாலிபன்களுக்கும் தற்போது கடுமையான மோதல் நடைபெற்று வருகிறது. இந்த தாக்குதல்களில் தங்கள் உயிரை காத்து கொள்ள ஆப்கன் வீரர்கள் தஜிகிஸ்தான் எல்லைக்கு சென்றுவிட்டனர். சுமார் 1,600 வீரர்கள் வரை தஜிகிஸ்தானுக்கு பின்வாங்கியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளது. தாலிபன்கள் ஆப்கனை வேகமாக கைப்பற்றி வருகின்றனர். மேலும், ஆப்கனில் மூன்றில் ஒரு பங்கு பகுதிகளை தற்போது தாலிபன்கள் கைப்பற்றியுள்ளதாக ஊர்ஜிதப்படுத்தப்படாத தகவல்கள் வெளியாகியுள்ளன. இதனால் ஆப்கன் மக்கள் கவலை அடைந்துள்ளனர்.

விஜயபாரதம்



# கடன் வாங்கும் பாகிஸ்தான்

பாகிஸ்தான் தற்போது பெரிய அளவில் எண்ணெய் மற்றும் எரிவாயு பற்றாக்குறையை எதிர்கொண்டுள்ளது. விரைவில் மின்சார பற்றாக்குறையும் எதிர்பார்க்கப்படுகிறது. இதனால், ஏற்கனவே கடனில் மூழ்கியுள்ள பாகிஸ்தான், சௌதி அரேபியாவை தலைமையிடமாகக் கொண்டு செயல்படும் இஸ்லாமிய மேம்பாட்டு வங்கியுடன் (ஐ.டி.பி) புதிதாக 4.5 பில்லியன் அமெரிக்க டாலர் கடன் வாங்குவதற்கான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது. இந்த வங்கிக் கடன், கச்சா எண்ணெய், சுத்திகரிக்கப்பட்ட பெட்ரோலிய பொருட்கள், இயற்கை எரிவாயு மற்றும் தொழில்துறை ரசாயன யூரியா ஆகியவற்றிற்கு மூன்று ஆண்டுகளுக்கு பணம் செலுத்த பயன்படும் என்று ஆசியா டைம்ஸ் தெரிவித்துள்ளது. பிரதமர் இம்ரான் கான் தலைமையிலான அரசாங்கத்தின் தவறான நிர்வாகத்தால் இந்த நெருக்கடி ஏற்பட்டுள்ளதாக எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டுகின்றன.



விஜயபாரதம்

# வலையில் சிக்கிய மீம்கள் . . .



# அரசே தடுப்பூசி விற்கும் அவலம்

விஜயபாரதம்


மேற்கு வங்கத்தில், தேர்தலின்போது அனைவருக்கும் இலவச தடுப்பூசி செலுத்தப்படும் என வாக்குறுதி அளித்திருந்தார் திருணாமூல் காங்கிரஸ் தலைவி மமதா பேனர்ஜி. ஆனால், தான் ஜெயித்து வந்த பிறகு, தனது வாக்குறுதியை மறந்துவிட்டார்.

மத்திய அரசு அனைத்து மாநிலங்களுக்கும் இலவச தடுப்பூசிகளை வழங்கி வருகிறது. அங்குள்ள தனியார் மருத்துவமனைகள் தடுப்பூசிக்கு குறைந்தபட்சமாக ரூ. 800 வசூலிக்கின்றன. இந்நிலையில், அம்மாநில அரசு, மக்களுக்கு இலவச தடுப்பூசி செலுத்துவதில்லை.

முதலமைச்சரின் நிவாரண நிதிக்கு ரூ. 315 செலுத்தி, அந்த ரசீதை கொண்டு வந்து காட்டுபவர்களுக்கு மட்டுமே தடுப்பூசிகள் செலுத்தப்படுகிறது. இது தொடர்பாக, அனைத்து மாவட்ட அட்சியர்களுக்கும் இது குறித்த கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. அதில் முதலமைச்சர் நிவாரண நிதிக்கு செலுத்துவது அரசாங்கத்தின் கொள்கை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், அதில் பணம் செலுத்துவதற்கான இரண்டு வங்கிக் கணக்கு விவரங்களும் குறிப்பிடப்பட்டுள்ளன.


சமீபத்தில், மமதா பேனர்ஜி, தொற்றுநோய்த் தடுப்பு குறித்து விவாதிக்க ஒரு கூட்டத்தை நடத்தினார், அங்கு வந்திருந்த சேம்பர் ஆஃப் காமர்ஸ் அமைப்பை சேர்ந்த தொழிலதிபர்களை, மாநில அரசிடம் தடுப்பூசி வாங்கிக்கொள்ள நிர்ப்பந்தித்துள்ளார். மேலும், தனியார் மருத்துவமனைகளை மாநில அரசிடம் இருந்து தடுப்பூசிகள் வாங்கிகொள்ள ஊக்குவித்தார். இதனால், திருணமூல் காங்கிரஸ் அரசு, தடுப்பூசிகளை விற்று குறுக்கு வழியில் லாபம் சம்பாதிக்க பார்ப்பது வெட்டவெளிச்சமாகியுள்ளது. முன்னதாக பஞ்சாப்பை ஆளும் காங்கிரஸ் அரசும்கூட தடுப்பூசி மருந்தை தனியாருக்கு விற்று ஊழல் செய்த்து அனைவரும் அறிந்ததே.

தனியார் மருத்துவமனைகளில் தடுப்பூசிகளை செலுத்திக்கொள்ள கட்டணம் வசூலிக்கப்படுகிறது. ஆனால் அரசு சலுகைகளைப் பெறும் நடுத்தர, ஏழைக் குடும்பங்களை சேர்ந்தவர்களை கட்டணம் செலுத்த அரசு கட்டாயப்படுத்தக்கூடாது. மேலும், அனைவருக்கும் இலவச தடுப்பூசி வழங்குவதாக மத்திய அரசு ஏற்கனவே அறிவித்துள்ள நிலையில், மேற்கு வங்க மக்கள் மட்டும் ஏன் தடுப்பூசிகளுக்கு பணம் செலுத்தவேண்டிய கட்டாயத்திற்கு ஆளாக்கப்படுகின்றனர்?



# இரட்டை மலை சீனிவாசன்

தாழ்த்தப்பட்ட இனத்தில் பிறந்து, தாழ்த்தப்பட்டோருக்காக குரல் கொடுத்ததோடு மட்டு மல்லாமல், அவர்களின் முன்னேற்றத்திற்காகவும் உழைத்த மாமனிதர் இரட்டைமலை சீனிவாசன். பட்டியலினத்தவர், கீழ்ஜாதி என்ற ஜாதி பாகுப்பாட்டை முறியடித்து, சென்னை மாகாண சட்டசபை உறுப்பினராகப் பணிபுரிந்தார். தொழிலால் அவர் ஒரு வழக்கறிஞராக இருந்தாலும், அவர் ஒரு தலைச்சிறந்த அரசியல்வாதி, பட்டியலின முன்னேற்ற ஆர்வலர், சுதந்திரப் போராட்டவீரர், சமூகசீர்திருத்தவாதி என பல பரிமாணங்களில் தன் தேசப்பணியை செய்தவர். மகாத்மா காந்தியின் பட்டியல் இனத்தை சார்ந்த நெருங்கிய கூட்டாளி இரட்டைமலை சீனிவாசன் என்று சொன்னால் அது மிகையாகாது.



விஜயபாரதம்

பாரதத்தில் பட்டியலின இயக்கத்தின் முன்னோடிகளில் ஒருவராக இருந்து வந்த இரட்டமலை சீனிவாசன், தனது கல்லூரிப் படிப்பிற்குப் பின்னர், எழுத்தராக நீலகிரியில் உள்ள நிறுவனத்தில் வேலைக்குச் சேர்ந்தார். பத்து ஆண்டுகள் அங்கு பணியாற்றிய அவர், 1890ல் சென்னைக்கு வந்தார். 1891ல் 'பறையர் மகாசன சபை' மற்றும் 1893ல் 'பறையன்' என்ற திங்கள் இதழை தோற்றுவித்தார். 1900 ஆம் ஆண்டுவரை அவ்விதழை நடத்திய அவர், அதே ஆண்டில் வேலைத் தேடி தென்னாப்பிரிக்கா சென்றார். அங்கு ஒரு மொழிப்பெயர்ப்பாளராக நீதிமன்றத்தில் பணியில் சேர்ந்த அவர், 1921ல் மீண்டும் பாரதம் திரும்பினார்.

லண்டனில் 1930, 1931 மற்றும் 1932களில் நடைபெற்ற வட்டமேஜை மாநாடுகளின் பட்டியலின மக்களின் பிரதிநிதியாக அம்பேத்கருடன் கலந்துகொண்டார் இரட்டைமலை சீனிவாசன். பட்டியலின மக்களுக்கு முழு உரிமையைப் பெற்றுத் தர எண்ணிய அவர்கள் இருவரும், அம்மாநாட்டில், பட்டியலின மக்களுக்கு இரட்டை வாக்காளர் தொகுதி வழங்கப்பட வேண்டும், விகிதாச்சார அளவுக்கு ஏற்ப கல்வியிலும், வேலை வாய்ப்பிலும் உரிய பங்கு அளிக்கப்பட வேண்டும் என்பதையும் வலியுறுத்திப் பேசினர்.

''நீ எதில் இருக்கிறாயோ, அதில் இருந்து போராடு. ஒரு மதத்தில் இருக்கும்போது என்ன சலுகையை அனுபவிக்கிறாயோ அந்தச் சலுகையை இன்னொரு மதத்துக்குப்போன பிறகு எதிர்பார்க்காதே!" ''விரோதமும் வெறுப்பும் மமதையும் பாவமானவை'' என்று சொன்னவர் இரட்டைமலை சீனிவாசன்.

ஜி.எம் சீனு